©
GOVERNMENT OF TAMIL NADU
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 1.60 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 29A]

சென்னை, வியாழக்கிழமை, பிப்ரவரி 2, 2012
தை 19, திருவள்ளுவர் ஆண்டு - 2043

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

2012–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2012.**

***1998–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2011–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 43/1998.

16–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** (இதன்பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1998–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் 16–ஆம் பிரிவில், (c) எனும் கூறில், ''பதினோராண்டுகள்'' எனும் சொற்களுக்குப் பதிலாக, ''பதினாறாண்டுகள்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

;செல்லத்தக்க தாக்குதல்.

**3.** முதன்மைச் சட்டத்தில் என்ன தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2011–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1–ஆம் நாளன்றோ அல்லது அதற்குப் பின்னரோ மற்றும் 2011–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22–ஆம் நாளுக்கு முன்னரோ இச்சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்ட முதன்மைச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையில்

அலுவலர் எவராலும் அல்லது அதிகார அமைப்பு எதனாலும் செய்யப்பட்ட செயல்கள் அனைத்தும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும், இச்சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்ட முதன்மைச் சட்டமானது அத்தகைய செயல்கள் செய்யப்பட்ட அல்லது நடவடிக்கைகள் செய்யப்பட்ட அல்லது எடுக்கப்பட்ட அனைத்து முக்கியமான காலங்களிலும் நடைமுறையில் இருந்திருந்தாற்போன்றே சட்டத்திற்கு இணங்கிய வகையில் அனைத்து நோக்கங்களுக்காகவும் செல்லத்தக்கவாறு எப்போதுமே செய்யப்பட்டுள்ளதாகவோ அல்லது எடுக்கப்பட்டுள்ளதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

நீக்கமும் காப்பும்.

**4.** (1) 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்த) அவசரச் சட்டமானது இதன்மூலம் நீக்கம் செய்யப்படுகிறது. தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/2012.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்ற போதிலும், இந்த அவசரச் சட்டத்தால் திருத்தப்பட்ட முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ, இந்தச் சட்டத்தால் திருத்தப்பட்ட முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்டிருப்பதாகவோ அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

**ஓ. பன்னீர்செல்வம்**,
*நிதி அமைச்சர்.*

**நோக்க—காரண விளக்கவுரை.**

28/2006 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தால் திருத்தப்பட்ட 1998—ஆம் ஆண்டு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 16—ஆம் பிரிவின் (c) எனும் கூறுக்கு ஏற்ப, ஒப்பந்தப்புள்ளியை வரவேற்கும் அதிகார அமைப்பினால் வரவேற்கப்படும், மதிப்பீடு செய்யப்படும் மற்றும் ஏற்றுக்கொள்ளப்படும் ஒப்பந்தப்புள்ளி தொடர்பான 9 மற்றும் 10—ஆம் பிரிவுகளின் வகைமுறைகளானவை, மேற்சொன்ன 43/1998 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து அதாவது 2000—ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1—ஆம் நாளிலிருந்து பதினோராண்டுகளுக்கு மேற்படாததொரு கால அளவிற்கு, அரசின் ஒரு சில துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், சட்டப் படியான வாரியங்கள் மற்றும் அத்தகைய பிற நிறுவனங்களிலிருந்து பெறப்படும் அவற்றால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகள் அல்லது வழங்கப்பெறும் பணிச்சேவைகளைப் பொறுத்த அளவிலான கொள்முதல்களுக்குப் பொருந்துதல் கூடாது. மேற்சொன்ன துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், சட்டப்படியான வாரியங்கள் மற்றும் அத்தகைய பிற நிறுவனங்களானவை, கொள்முதல் நடவடிக்கைகளில், எதிர்கொண்டு நிலைத்திருக்கும் வகையிலும், போட்டியிடும் வகையிலும் அவற்றை ஊக்கபடுத்தும் நோக்குடன், அரசு மேற்சொன்ன 43/1998 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின் 16—ஆம் பிரிவின் மேற்சொன்ன (c) எனும் கூறின் படியான அத்தகைய அரசுத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் முதலானவற்றிற்கு வழங்கப்பட்ட விலக்களிப்பை 2011—ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1—ஆம் நாளிலிருந்து மேலும் ஐந்து ஆண்டுகளைக்கொண்டதொரு கால அளவிற்கு நீட்டிப்பதெனவும், அந்த நோக்கத்திற்காக, மேற்சொன்ன சட்டத்தின் 16—ஆம் பிரிவின் மேற்சொன்ன (c) எனும் கூறினை திருத்துவதெனவும் முடிவு செய்துள்ளது. அதற்கிணங்கிய வகையில் 2011—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 5/2011) 2011—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20—ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டது. அது 2011—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22—ஆம் தேதியிட்ட *தமிழ்நாடு அரசிதழின்* சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

2. மேற்சொன்ன 2011—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 5/2011) பிறப்பிக்கப்பட்ட பின்னர், 2011—ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15—ஆம் நாளன்று இம்மாநிலத்தின் சட்டமன்றப் பேரவை மீண்டும் கூட்டப்பட்டது. அன்றைய தினத்தில் முல்லைப்பெரியாறு அணை தொடர்பான தீர்மானம் ஒன்றை பிறப்பித்ததைத் தவிர வேறு அலுவல் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே 2011—ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15—ஆம் நாளன்று சட்டமன்றப்பேரவையில் அந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமையும் வகையிலான சட்டமுன்வடிவானது அறிமுகப்படுத்தப்படவில்லை. அரசமைப்பின் 213—ஆம் உறுப்பின் (2) எனும் கூறில் குறித்துரைக்கப்பட்ட ஆறு வாரங்கள் எனும் கால அளவானது 2011—ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15—ஆம் நாளிலிருந்து தொடங்குகிறது. அதன் விளைவாக இந்த அவசரச் சட்டமானது, 2012—ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25—ஆம் நாளன்று ஆறு வாரங்கள் எனும் கால அளவானது முடிவு பெறுவதால், நடைமுறைக்கு வருவது செயலற்றுப்போகும். எனவே அத்தகைய அரசுத் துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள் முதலானவற்றிற்கு மேற்சொன்ன 43/1998 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின் 16—ஆம் பிரிவின் (c) எனும் கூறின்படி வழங்கப்பட்டுள்ள விலக்களிப்பை, 2011—ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1—ஆம் நாளிலிருந்தும் அது முதற்கொண்டும் மேலும் ஐந்து ஆண்டுகளைக் கொண்டதொரு கால அளவிற்கு நீட்டிப்பதெனவும், அந்நோக்கத்திற்காக மேற்சொன்ன சட்டத்தின் 16—ஆம் பிரிவின் மேற்சொன்ன (c) எனும் கூறினைத் திருத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்கிய வகையில் 2012—ஆம் ஆண்டு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்த) அவசரச் சட்டமானது, (தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/2012) 2012—ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 24—ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு, அது 2012—ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25—ஆம் தேதியிட்ட *தமிழ்நாடு அரசிதழின்* சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

**3.** இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைகிறது.

**ஓ. பன்னீர்செல்வம்**,
*நிதி அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.